R4746

## REGARDING THE WORD FEAR

## பயம் என்ற வார்த்தையைப்பற்றி

“அவர்கள் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.” ஏசாயா 29:13

பயம் என்ற வார்த்தை ஒரு இணைப்பிலோ அல்லது வேறொன்றிலோ பயன்படுத்தப்பட்டாலும் அது ஒன்றுதான் என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். வெவ்வேறு வகையான பெர்ரி பழம், வெவ்வேறு வகையான பார வண்டிகள், வெவ்வேறு வகையான மிருகங்கள் இருப்பது போல வெவ்வேறு வகையான பயமும் இருக்கின்றன. அதன் நோக்கம் அல்லது ஆரம்பம் எதுவாக இருந்தாலும் பயம் என்பது பயம் தான். ஒரு சரியான வகையான பயமும் ஒரு சரியான வகையான அச்சமும் இருக்கிறது. சரியான பயம் இந்த அச்சத்தையும் அதனுடன் பெற்றிருக்கிறது. உங்களுக்கு ஒரு ராஜா அல்லது சக்ரவர்த்தியுடன் அறிமுகம் கிடைத்தால், நான் புண்படுத்தும்படி, காயப்படுத்தும்படி ஏதாவது செய்துவிடுவேனா என்று பயப்படுகிறேன் என்று நீங்கள் சொல்லலாம். இதே போல நம்முடன் இருக்கிறது. கர்த்தரை கோபமூட்டும் எதையும் செய்ய நாம் அஞ்ச வேண்டும்.

நமது கர்த்தராகிய இயேசு சொன்னதாவது: “ஆத்துமாவை கொல்ல வல்லவராயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் கெகன்னாவிலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.” தேவனிடம் நாம் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு பயமாக இது இருக்கிறது. நாம் அவரது உயர்ந்த தன்மையையும் நமது சிறிய தன்மையையும் அதிகம் மதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் அவரது பிரசன்னத்திற்குள் ஜெபத்தில் செல்லும் போது சரியானபடி பயபக்தியுடனும் செல்ல வேண்டும். அவர் ஒரு மகா ராஜா என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். நாம் கர்த்தரோடு தொடர்பு கொள்ளும் போதெல்லாம் இந்த பயபக்தி குறையும்படி எதையும் செய்யாதபடி நாம் அச்சப்பட வேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் முத்திரையிடப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் அல்லது துன்பப்படுத்தும் எந்த காரியத்தையும் செய்யாதபடி நாம் கவனமுடன் இருக்க வேண்டும்.

“அவர்கள் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது” என்கிற நமது பாடத்தின் வசனத்தை கவனிப்போம். ஒரு தவறான பயம் இருக்கிறது என்பதை தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் நமக்கு குறிப்பிட்டு கூறுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். நாம் கேள்விப்படுகிற கத்தோலிக்க சபையின் கூற்று: நான் தேவனால் அங்கீகரிக்கப்பட்டால், முதலாவது நான் சில பரிசுத்தவான்களிடம் ஜெபிக்க வேண்டும். பிறகு அவர்களிடம் மரியாளிடம் பரிந்து பேசும்படி கேட்க வேண்டும். அதன்பிறகு மரியாளிடம் மகனிடம் பரிந்து பேசும்படி கேட்க வேண்டும். அவர்கள் பயத்தினால் பிதாவானவரை கற்பிக்கவில்லை. இது மனிதர் போதனையினால் வந்ததாக இருக்கிறது. சில வேத வாக்கியங்கள் குறிப்பிடுவது போல, தேவனைப் பற்றிய உயர்ந்த காரியங்களை எடுத்துவிட்டு, “பிசாசுகளின் உபதேசங்களை” நுழைத்திருக்கிறார்கள்.

### கர்த்தர் தலைமையாக இருக்கிறார்

வசனம் கூறுகிறதாவது: “இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.” (ஏசாயா 8:12) இங்கே சொல்லப்பட்ட பயமானது ஜனங்களை வழிநடத்துகிற விசேஷமாக தலைவர்களை வழி நடத்துகிற ஒரு சபை கூட்டமைப்புக்காக கூக்குரலிடுகிற பயமாக இருக்கும். இது இடம் பெறவில்லையென்றால், அங்கே பெரும் ஆபத்து இருக்கும். கர்த்தர் தலைமையாக இருக்கிறார் என்பதை அவரது பிள்ளைகள் அறிவார்கள். அவர் இந்த காரியங்களில் அவர்களை வழிநடத்துவார் என்பதையும் இந்த கூட்டமைப்புகளில் அவர்கள் சேரக்கூடாது என்பதையும் அவர்கள் அறிவார்கள். இங்கே கூட்டமைப்பு என்பது சபை கூட்டமைப்புக்கு மேலானதை அர்த்தப்படுத்துகிறது. “அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நாம் பயப்படக்கூடாது.” அதாவது அவர்கள் பயப்படுவது போல நாம் பயப்படக்கூடாது என்பதே. நமது பாதுகாப்பு மனித சக்தியின் மேல் சார்ந்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் இருதயங்களை கர்த்தருக்கு கொடுத்திருந்தால், அவர்களது சகல வழிகளிலும் அவரை சந்தோஷப்படுத்த நாட வேண்டும். மேலும் சகலத்தையும் அவர் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடத்துவார் என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

அச்சம் என்பது என்ன என்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள். தொழிலாளர் கூட்டமைப்பு அவர்களது அறக்கட்டளை கூட்டமைப்பின் பயத்தினால் வழி நடத்தப்படுகிறது. இதில் அவர்கள் பயத்தின் ஆபத்தின் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவ்விதமாக கர்த்தரின் ஜனங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்களது வழிகளிலும் அவர் மேல் உள்ள அக்கறையிலும் உறுதி பண்ணவும் விசுவாசத்தின்படி நடக்கவும் அவர் சகலத்தையும் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடத்துவார் என்பதை அங்கீகரிக்கவும் வேண்டும். மேலும், அவர் அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலையும் அறிவுறுத்தல்களையும் கொடுத்து அவர்களை முடிவு வரை உற்சாகப்படுத்துவார்.

இந்த கூட்டமைப்பின் மீது தயவான மனோபாவத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். பூமிக்குரிய ஸ்தாபனங்களை பராமரிப்பதற்கு இந்த கூட்டமைப்பின் அவசியத்தை நாம் காண்கிறோம். இப்படியாக சமூக வியாபாரத்தின் வழியில் இந்த நிலையை எடுப்பவர்களுக்கு ஓரளவுக்கு சாக்குபோக்கு இருக்கிறது. எனினும் அதே சமயம் நமது தயை தெய்வீக வார்த்தைகளினால் முறைப்படுத்தப்படவேண்டும். இந்த எல்லா சிக்கல்களிலிருந்தும் முடிந்த வரை தெளிவான நிலையை காண்கிற அனைவருக்கும் இது இன்றியமையாததாக இருக்கிறது. அவர்களது ஆலோசனையை பெற விரும்புகிறவர்கள் அனைவருக்கும் அது உதவிகரமாக இருக்கும். அவர்களது அனுதாபம் தொழிலாளர் சங்கங்களுக்கு சொல்லக்கூடியது உதாரணத்திற்கு: “நாங்கள் உங்கள் கஷ்டத்தை காண்கிறோம். உங்களுடைய ஸ்தாபனங்களின் மூலமாக ஒரு ஸ்திரத்தன்மையை பராமரித்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உங்கள் நிலைமையில் நாங்கள் அனுதாபம் கொள்ளுகிறோம். எனினும் பேரழிவுகளை தவிர்ப்பதற்கு பதிலாக, முடிவில் உங்கள் ஸ்தானம் உங்களை தொந்தரவில் ஈடுபடுத்துவதற்கு உதவும் சந்தேகமேயில்லை, மற்றவர்களையும் தொந்தரவில் ஈடுபடுத்த உதவும்.”

எது விடுதலை செய்யும் என்பதை கர்த்தருடைய பிள்ளைகள் அறிவார்கள். தேவனைப் பற்றிய சத்தியம், அவரது குணலட்சணம், அவரது சகோதரர்கள், கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக எல்லா மனிதர்களுக்கும் நன்மை செய்ய நாடுவதில் நிலைத்திருக்க வேண்டும்.